**சென்னை–5, சேப்பாக்கம், வேளாண்மை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணைகள்.**

பிறப்பிப்பவர் – திரு வ.தட்சிணாமூர்த்தி, இ.ஆ.ப.,

செ.மு. ஆணை எண். அநிபி6 / 54784 / 2018 நாள். 26.09.2018

பொருள்:– பணிக்குழு – தமிழ்நாடு அமைச்சுப்பணி – 09.08.2010 அன்று அமரரான எஸ். ராஜசேகரன், உதவி வேளாண்மை அலுவலர் – வாரிசு / மகன் திரு. R. செந்தில்குமார் அவர்களுக்கு கருணை அடிப்படையில் தற்காலிக பணியமர்வில் கிடங்கு மேலாளர்(தரம்–3) ஆக பணிநியமனம் செய்து – ஒதுக்கீடு ஆணை வழங்குதல்– குறித்து.

பார்வை:–
1 அரசு ஆணை எண். 560, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் 3–8–1977.
2 அரசு ஆணை எண். 16, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்த (P) துறை, நாள் 21–2–2006.
3 அரசு ஆணை எண். 61, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் (Q1) துறை, நாள் 19–7–2006
4 அரசு ஆணை எண். 135, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் ( Q2 ) துறை, நாள் 4–10–2006.
5 அரசு கடித எண். 126 /Q1 / 2006, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 16–9–2006.
6 அரசாணை எண். 42, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் 12–3–2007.
7 அரசு கடித எண் 86/க்யூ.1/ 2010, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 4.5.2010.
8 இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, சென்னை–5 அவர்களின் கடித எண். அபபி3/16761/2015, நாள். 08.05.2018.

****

ஆணை–

இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, சென்னை–5 கட்டுப்பாட்டில், தஞ்சாவூர், தோட்டக்கலை துணை இயக்குநர் அலுவலகத்தில் உதவி வேளாண்மை அலுவலர் ஆகப் பணிபுரிந்து வந்தபோது 09.08.2010 அன்று இயற்கையெய்திய எஸ். ராஜசேகரன் என்பவரின் வாரிசு / மகன் திரு. R. செந்தில்குமார் அவர்களுக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கிட கோரி பார்வை 8–ல் கண்டுள்ளபடி, இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, சென்னை–5 அவர்கள் மூலமாக கருத்துரு பெறப்பட்டது.

2) இக்கருத்துருவினை ஆராய்ந்து கருத்துருவின் அடிப்படையிலும் பார்வையில் கண்டுள்ள அரசாணைகளின் அடிப்படையிலும் அமரர் எஸ். ராஜசேகரன், உதவி வேளாண்மை அலுவலர் குடும்பம் வறிய நிலையிலிருந்து மீள அன்னாரின் வாரிசுதாரரான மகன் திரு. R. செந்தில்குமார் அவர்களுக்கு கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் ரூ.19500-62000 (Level-8) என்ற ஊதிய விகிதத்தில் தற்காலிக பணியமர்வில் கிடங்கு மேலாளர்(தரம்–3) ஆகப் பணிநியமனம் செய்து ஆணையிடப்படுகிறது. இவருக்கு பணியிட ஆணை வழங்க வேளாண்மை இணை இயக்குநர், விழுப்புரம் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

3) திரு. R. செந்தில்குமார் அவர்களுக்கு உரிய பணியிட உத்திரவு வழங்கிடவும் இவர் பணியில் சேரும் சமயம் மருத்துவ உடல்நல தகுதிச் சான்றினை பெற்ற பின்னரே பணியில் சேர அனுமதிக்க வேண்டும் எனவும் விழுப்புரம், வேளாண்மை இணை இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

4) திரு. R. செந்தில்குமார் அவர்கள் கிடங்கு மேலாளர்(தரம்–3) ஆகப் பணியில் சேர்ந்து கொண்ட விவரம், நியமனம் வழங்கிய ஆணை நகல்களுடன் இவ்வியக்ககத்திற்கு தெரிவிக்கவும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

5) திரு. R. செந்தில்குமார் அவர்கள் கிடங்கு மேலாளர்(தரம்–3) ஆக தற்காலிக பணியமர்வில் நியமனம் செய்யப்படுவதால் இவரது பணியினை வரன்முறை செய்து அரசாணை பெறுவதற்கு உரிய கருத்துருவினை அசல் ஆவணங்களுடன் முழு வடிவில் இவ்வியக்ககத்திற்கு 3 மாத காலத்திற்குள் அனுப்பி வைத்திடவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது .

6) பார்வை 8–ல் கண்ட கடிதத்தின் மூலமாக கருணை அடிப்படையில் பணிநியமனம் பெறுவதற்கு பரிசீலனைக்காக அனுப்பி வைக்கப்பட்ட அமரர் எஸ். ராஜசேகரன், உதவி வேளாண்மை அலுவலர் அவர்களது பணிப்பதிவேடு மற்றும் அசல் ஆவணங்கள் யாவும் இணைப்பில் கண்ட விவரப்படி இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. அவற்றினைப் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகையை வழங்கிட விழுப்புரம், வேளாண்மை இணை இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

வேளாண்மை இயக்குநர். 26/9/18

இணைப்பு – அமரர் எஸ். ராஜசேகரன், அவர்களின் பணிப்பதிவேடு – 4 தொகுதிகள்.
மற்றும் இணைப்பில் வ.எண். 1 முதல் 18 வரையிலான ஆவணங்கள் .

பெறுநர்
திரு. R. செந்தில்குமார்,
த/பெ. அமரர் எஸ். ராஜசேகரன்,
416/41, கோகுலம் இல்லம்,
சுகந்தி நகர்,
ஆணையூர் வட்டம்.
மதுரை – 625 017. (பதிவஞ்சலில்)

நகல்: வேளாண்மை இணை இயக்குநர், விழுப்புரம். (பதிவஞ்சலில்).
நகல்: இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, சென்னை–5
நகல்: தோட்டக்கலை துணை இயக்குநர், தஞ்சாவூர்.
நகல்: அபபி. பிரிவு இவ்வலுவலகம்.
நகல்: அநிபி–4. இருக்கை.
நகல்: அநிபி–6..இருப்புக் கோப்பு.

26/9/18